# மன அமைதியைத் தேடல்

சிந்தனை விருந்து - 3

ஒரு துறவி வீதியிற் குனிந்து எதையோ தேடிக்கொண்டிருந்தார். அதைக் கண்டு பலர்; *"நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?"* என்று கேட்டனர்.
"ஒரு ஊசியைத்தான் தொலைத்து விட்டேன்" என்றார் துறவி.
*"ஐயா! குறிப்பாக ஊசியை எங்கு தொலைத்தீர்கள் என்று கூற முடியுமா?"*
"ஊசியை வீட்டிற்குள் தொலைத்துவிட்டேன்" என்றார் அமைதியாக.
அனைவரும் திகைத்து நின்றனர்.
*"வீட்டினுட் தொலைத்ததை வீதியிற் தேடினாற் கிடைக்குமா சுவாமி?"* என்று எல்லோரும் ஒரே முகமாய்க் கேட்டனர்.
"நீங்கள் எல்லோரும் இப்படித்தான் செய்கிறீர்கள். மனஅமைதியும் சந்தோஷமும் மனதிற்குள்ளேதான் இருக்கிறது. நீங்கள் அவற்றை வெளியிற் தானே தேடிக் காலத்தையும் திறமையையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்" என்றார் துறவி.
அந்த உண்மை அப்போதுதான் எல்லோருக்கும் உறைத்தது.

தொகுப்பு : மகா.